# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு) மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4418/F/2023**

திரு.மு.ரமேஷ், -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.ரமேஷ், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.T.சரவணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 10.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "காவல்துறை துணை தலைவர் விழுப்புரம் அவர்களுக்கு 23.08.2023 தேதியில் கடிதம் மூலம் புகார் அளித்தேன் கடித எண்.RT 658001788 IN இந்த புகார் மனு தங்கள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் கோப்புகளையும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 2(J)-ன் கீழ் கள ஆய்வு மேற்கொண்டு தேவையான ஆவணங்களின் சான்றிட்ட நகல் பெற அனுமதி வழங்குமாறு

கேட்டுக்கொள்கிறேன்" என்ற தகவலை வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், காவல்துறை துணைத் தலைவர் அலுவலகம், விழுப்புரம் மாவட்டம்-605 602 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர், விழுப்புரம் சரகம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் ந.க.எண்.சி1/ 5460022/2023, நாள் 23.11.2023 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தினைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ந.க.எண்.566/கூ.கா.க./த.அ.உ.ச/கள்ள/2023, நாள் 27.11.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர், 12.12.2023 நாளிட்ட பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.566/கூ.கா.க./த.அ.உ.ச/கள்ள/2023, நாள் 27.11.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.566/கூ.கா.க./த.அ.உ.ச/கள்ள/2023, நாள் 27.11.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து ஏற்கிறது. இருப்பினும் ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களுக்கு மீண்டும் ஒருமுறை மனுதாரருக்கு தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி***

*சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.*

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4418/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**<u>மனுதாரர்</u>**

திரு.மு.ரமேஷ்,
எண்.18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை,
திருக்கோவிலூர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 754.

Copy to: File NS/PA-